இந்திய உச்ச நீதிமன்றம்,

2020 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 07 ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு. எஸ்.அப்துல் நசீர்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. தீபக் குப்தா

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு:

உரிமையியல் மேல்முறையீடு எண் 8425/2009

சி.எஸ். வெங்கடேஷ் – மேல்முறையீட்டாளர்

//எதிர்//

சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள் மூலம்

ஏ.எஸ்.சி. மூர்த்தி (இறந்தவர்) மற்றும் பலர்–எதிர்மேல்முறையீட்டாளர்கள்

குறித்தவகை நிவாரணச்சட்டம், 1963– பிரிவு 16 (C) – வாதி (இறந்ததிலிருந்து) கேள்விக்குரிய இடமானது அவருக்கு சாதகமாக ஒதுக்கப்பட்ட இடம் என தெரிவித்தார். இதில் – அவர் கட்டிடம் கட்ட

தொடங்கினார். அவரிடம் போதுமான நிதி இல்லை. எனவே வட்டிக்கு பணம் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் பிரதிவாதிகள் முன் பணம் கொடுத்தனர் – இரண்டு மாதங்களை தவிர வாதி பணம் செலுத்த தவறி விட்டார். எனவே, பிரதிவாதிகளுக்கு தங்குவதற்கு இடம் தேவை என்பதால் வாதி அட்டவணைச் சொத்தின் உடைமையில் அவர்களை வைத்து அடமான பத்திரம் ஏற்படுத்தி கொடுத்தார். – வாதியால் தொடர்ந்து வட்டி செலுத்த முடியவில்லை. பெயரளவிலான விற்பனை பத்திரத்தை ஏற்படுத்தி கொடுக்க வாதியிடம் பிரதிவாதிகள் கேட்டனர். ரூ.35,000/– த்திற்கு 23.04.1975–ம் தேதியில் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக வாதி விறப்னை பத்திரம் எழுதி கொடுத்தார். பிரதிவாதிகளால் முன் பணமாக கொடுக்கப்பட்ட ரூ.35,000/–த்தை பிரதிவாதிகள் பெற்றுக் கொண்ட பிறகு 23.04.1975–ம் தேதிய மறு பரிசீலனை ஒப்பந்த பத்திரத்தின் ஷரத்துப்படி வாதி பிரதிவாதிகளிடம் மறுபரிசீலனை பத்திரத்தை ஏற்படுத்தி கொடுக்க கேட்டார். இருந்தபோதும் பிரதிவாதிகள் விற்பனை பத்திரம் ஏற்படுத்தி கொடுக்க தவறி விட்டனர். பிரதிவாதிகளுக்கு எதிராக அட்டவணைச் சொத்தினை பொருத்து 23.04.1975 ம் தேதிய மறுபரிசீலனை ஒப்பந்த பத்திரப்படி குறித்தவகை நிறைவேற்றம் கோரி வாதி வழக்கு தாக்கல் செய்தார். பிரதிவாதிகளிடம் பெற்ற முன் தொகைக்கு பாதுகாப்பிற்காக பெறப்பட்ட ஒன்றுதான் பெயரளவிலான விற்பனை பத்திரம் என விசாரணை நீதிமன்றம் வாதிகளின்

கோரிக்கைக்கு எதிராக தள்ளுபடி செய்தது. வாதியின் மேல்முறையீட்டை உயர்நீதிமன்றம் அனுமதித்தது.

முடிவு : சுற்றியுள்ள வெளிச்ச சூழ்நிலையில் காண்கையில் பரிவர்த்தனைக்கான உண்மையான தன்மை ஆவணத்தின் வகையத்திலிருந்து உறுதிபடுத்தப்பட வேண்டும். ஒரே நாளில் இரண்டு ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே, 1882 சட்டத்தினுடைய பிரிவு 58(C)–ன் கண்ட வெளிப்படையான வகையத்தின்படி நிபந்தனைக்கான விற்பனை என்ற வழியில் பரிவர்த்தனை அடமானமாக முடியாது. விற்பனை பத்திரத்தில் கண்ட சங்கதிகளை பரிசீலனை செய்கையில், சொத்தானது ரூ.35,000/–த்திற்கு முழுமையாக விற்பதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. – எனவே மறுபரிசீலனை பத்திரம் ஏற்படுத்தியது ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளது. பெயரளவிற்கான விற்பனை பத்திரம் என்பதை ஏற்க முடியாது. வாதி தெரிவிப்பதாவது அவர் ரூ.35,000/–த்தை செலுத்திட தயராக இருந்துள்ளார். மற்றும் மறுபரிசீலனை பத்திரம் ஏற்படுத்தி கொடுத்திட பிரதிவாதிகளை அழைத்துள்ளார். இருப்பினும், வாதியின் பத்தி 11–ல் சொல்லியது போன்று வாதி ஒப்பந்த வியாபாரம் நடத்தி வந்தார். அதில் அவருக்கு பெரிய இழப்பு ஏற்பட்டது. அவர் வியாபாரத்தை கை விட்டு விட்டார். எவ்வித ஆதாரமும் இல்லாமல் மறுபயனை செலுத்திட தயாராக இருந்ததாக சொல்லும் வெறும் சங்கதி நிலை நிற்கக்கூடிய சங்கதியாக

ஏற்க முடியாது. – உயர்நீதிமன்ற தீர்ப்பு இரத்து செய்யப்பட்டு விசாரணை நீதிமன்ற முடிவு மீண்டும் நிலை நிறுத்தப்பட்டது – 1882 சொத்துரிமை மாற்று சட்டம் – பிரிவு 58 (c).

மேல்முறையீட்டை அனுமதித்தது நீதிமன்றம் தீர்ப்பளித்ததாவது–

1.1 அரசு தரப்பு சான்றாவணம் 8 ஆக குறியீடு செய்யப்பட்ட விற்பனை பத்திரத்தை சுற்றியுள்ள சூழ்நிலைகளும் படிக்கும்போது இது ஒருநேரடி விற்பனை என்பதை தெளிவாக குறிக்கிறது. சுற்றியுள்ள வெளிச்ச சூழ்நிலையில் காண்கையில் பரிவர்த்தனைக்கான உண்மையான தன்மை ஆவணத்தின் வகையத்திலிருந்து உறுதிபடுத்தப்பட வேண்டும். ஒரே நாளில் இரண்டு ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே 1882 சட்டத்தினுடைய பிரிவு 58 (c)–ல் கண்ட வெளிப்படையான வகையத்தின்படி நிபந்தனைக்கான விற்பனை என்ற வழியில் பரிவர்த்தனை அடமானமாக முடியாது. அரசு தரப்பு சான்றாவணம் 8–ல் கண்டபடி விற்பனை பத்திரத்தில் கண்ட சங்கதிகளை பரிசீலனை செய்கையில் சொத்தானது ரூ.35,000/– –த்திற்கு முழுமையாக விற்பதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆவணத்தில் பயன்படுத்தப்பட்ட மொழியானது குழப்பம் இல்லாமலும் மற்றும் தெளிவாகவும் மற்றும் அதன் வாசகங்களில் இருந்து தரப்பினர்களின் நோக்கம் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. தரப்பினர்களால்

கொடுக்கப்பட்ட சாட்சியமும் கூட முரணாக குறித்துரைக்கப்படவில்லை. ஒரு விற்பனைக்கான பரிமாற்றத்தை உருவாக்கிடவே தரப்பினர்கள் நோக்கமாக இருந்துள்ளது. எனவே மறுபரிசீலனை பத்திரம் ஏற்படுத்தியது ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளது. பெயரளவிற்கான விற்பனை பத்திரம் என்பதை ஏற்க முடியாது. [பத்தி 12–13] [682–ஜி–எச்; 683–ஏ–பி, டி–இ].

1.2 'தயார் மற்றும் விருப்பம்' வார்த்தை அவர்களுடைய தர்க்கரீதியான முடிவு ஒப்பந்தத்தின் அவர்களுடைய பகுதியை செயல்படுத்த வாதி தயாராக இருந்துள்ளார். அது அவரது நிறைவேற்றத்தை சார்ந்தது. நிறைவேற்றத்திற்கான பயனை கொடுத்திட தொடர்ச்சியான தயார் நிலையும் மற்றும் விருப்பமும் வாதிக்கான முன் நிபந்தனையாகும். வாதி அதை நிரூபிக்கவோ அல்லது நிரூபிக்க தவறுவதோ அவர் தோல்வியடைய வேண்டும். ஒப்பந்தத்தின் பகுதியான வாதியின் தாயார் மற்றும் விருப்ப நிலை தீர்மானித்திட வழக்கு தாக்கல் செய்வதற்கு முந்தைய மற்றும் பிந்தைய வாதியின் நடத்தையை அதனுடன் மற்ற சூழ்நிலையையும் பரிசீலனைக்கு நீதிமன்றம் எடுத்திட வேண்டும். பிரதிவாதிக்கு வாதி செலுத்த வேண்டிய தொகையானது அதன் தேவையானது நிரூபிக்கப்பட வேண்டும். அது கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டும். ஒப்பந்தம் ஏற்படுத்தி கொடுக்கப்பட்ட நாள் முதல் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படும் தேதி வரை

ஒப்பந்தத்தின் பகுதி நிறைவேற்றத்தை நிறைவேற்றிட அவர் தயாராகவும் மற்றும் விருப்பமாகவும் இருந்தார் என்பதை அவர் நிரூபிக்க வேண்டும். நீதிமன்றமானது வாதி தயாராகவும் மற்றும் எப்போதும் ஒப்பந்தத்தின் பகுதி நிறைவேற்றத்தை நிறைவேற்றிட தயாராகவும் இருந்தார் என்ற சங்கதி மற்றும் சூழ்நிலைகளில் தலையிடலாம். வாதி சொல்வது என்னவென்றால் ரூ.35,000/–த்தை பிரதிவாதிக்கு செலுத்திட வாதி தயாராக இருந்ததாகவும் மறுபரிசீலனை பத்திரத்தை ஏற்படுத்தி கொடுத்து பிரதிவாதிகளை அழைத்ததாகவும், இருப்பினும் வாதி பத்தி 11–ல் சொல்லியது போன்று வாதி ஒப்பந்த வியாபாரம் நடத்தி வந்தார். அதில் அவருக்கு பெரிய இழப்பு ஏற்பட்டது. அவர் வியாபாரத்தை கைவிட்டு விட்டார். மேலும் வாதி தரப்பிலான சங்கதியானது தற்போது வாதிக்கு வியாபாரமோ அல்லது தொழிலோ இல்லை மற்றும் வருவாய்க்கான ஆதாரம் இல்லை. அசையும் அல்லது அசையா சொத்து அவரிடம் இல்லை. எவ்வித ஆதாரமும் இல்லாமல் மறுபயனை செலுத்திட தயாராக இருந்ததாக சொல்லும் வாதி வெறும் சங்கதி நிலைநிற்கக்கூடிய சங்கதியாக ஏற்க முடியாது. பணம் செலுத்த தயாராக இருப்பதாக சொல்வது வாதிக்கு தேவையற்றது. ஆனால் வாதி தரப்பு பகுதி நிறைவேற்றத்தை நிரூபித்திட மறுபயன் தொகை ஏற்படுத்திட போதிய வசதி வாதி கொண்டிருந்தார் என்பது முக்கியமானதாகும். அ.சா.1–ன் வாக்குமூலத்தை தவிர வாதிக்கு மறு பரிசீலனை ஒப்பந்தத்தின்படி தொகை செலுத்துவதற்கான ஏற்பாடு செய்திட்டதை காட்டி வாதியிடம்

முழுமையான சாட்சியம் இல்லை. ஒப்பந்தத்தின் பகுதி நிறைவேற்றமான தயார் மற்றும் விருப்பநிலை வாதியிடம் இல்லையென சரியான வகையில் விசாரணை நீதிமன்றம் முடிவு செய்தது. சரியான காரணத்துடன் சொல்லப்பட்ட விசாரணை நீதிமன்ற தீர்ப்பினை உயர்நீதிமன்றம் மாற்றியது நியாயமானது அல்ல. [பத்தி 15, 20, 23] [683–ஜி–எச்; 684–ஏ–பி; 685–எஃப்–எச்; 686–ஏ–பி, இ–எஃப்]

சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள் மூலம் என்.பி. திருஞானம் (இறந்தவர்) –எதிர்– Dr. ஆர். ஜெகன் மோகன் ராவ் மற்றும் பலர் (1995) 5 எஸ்.சி.சி 115: [1995] 2 சப்ளி எஸ்.சி.ஆர் 53; புஷ்பராணி எஸ். சுந்தரம் மற்றும் பலர் –எதிர்– பவுலின் மனோன்மணி ஜேம்ஸ் (இறந்தவர்) மற்றும் பலர் (2002) 9 எஸ்.சி.சி 582; உமாபாய் மற்றும் ஒருவர் – எதிர்– சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள் மூலம் நீல்கந்த் தோண்டிபா சவான் (இறந்தவர்) மற்றும் ஒருவர் (2005) 6 எஸ்.சி.சி 243: [2005] 3 எஸ்.சி.ஆர் 521 – சார்வுறப்பட்டது.

மஞ்சுநாத் ஆனந்தப்பா URF சிவப்ப ஹனசி –எதிர்– தமன்சா மற்றும் பலர் (2003) 10 எஸ்.சி.சி 390: [2003] 2 எஸ்.சி.ஆர் 1068; புக்ராஜ் டி. ஜெயின் மற்றும் பலர் –எதிர்– G. கோபாலகிருஷ்ணா (2004) 7 எஸ்.சி.சி 251: [2004] 1 சப்ளி. எஸ்சிஆர் 324 – குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>வழக்கு சட்ட குறிப்பு</u>

[1995] 2 சப்ளி எஸ் சி ஆர் 53	சார்வுறப்பட்டது	பத்தி 16
(2002) 9 எஸ்.சி.சி 582	சார்வுறப்பட்டது	பத்தி 17
[2003] 2 எஸ்.சி.ஆர் 1068	குறிப்பிடப்பட்டுள்ளது	பத்தி 18
[2004] 1 சப்ளி எஸ் சி ஆர் 324	குறிப்பிடப்பட்டுள்ளது	பத்தி 18
[2005] 3 எஸ்.சி.ஆர் 521	சார்வுறப்பட்டது	பத்தி 19

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு:

உரிமையியல் மேல்முறையீடு எண். 8425/2009

2001 இன் வழக்கமான முதல் மேல்முறையீடு எண். 626 இல் பெங்களூரில் உள்ள கர்நாடக உயர் நீதிமன்றத்தின் 21.08.2006 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவில் இருந்து.

மேல்முறையீட்டாளர்களுக்காக வழக்கறிஞர் S.N. பட்

எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக வழக்கறிஞர்கள் திரிடீப் பயஸ், MS. சன்யகுமார், N.K. வர்மா MS. அஞ்சனா சந்திரசேகர்

இந்த நீதிமன்றத்தின் தீர்ப்புரை மாண்புமிகு நீதியரசர் திரு. எஸ். அப்துல் நசீர் அவர்களால் பகரப்பட்டது.

1. இந்த மேல்முறையீடு பெங்களூரு, கர்நாடகா, உயர்நீதிமன்றம் 21.08.2006– தேதியில் RFA No. 626/2001–ல் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிரானது. இதனால் மேல்முறையீட்டை உயர்நீதிமன்றம் அனுமதித்தது. மற்றும் பெங்களூரு நகர உரிமையியல் நீதிபதி OS.No. 3308/1988–ல் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்தது.

2. வழக்கில் A.S.C. மூர்த்தி வாதியாவார். வழக்கு நிலுவையில் இருந்த போது அவர் இறந்து விட்டார். எனவே அவரின் மனைவியான திருமதி ஜெயஸ்ரீ அவரின் சட்ட வாரிசாக கொண்டு வரப்பட்டார். இந்த மேல்முறையீட்டில் அவர் முதல் எதிர்மனுதாரர். வழக்கில் இந்த மேல்முறையீட்டாளரான C.S வெங்கடேஷ் 2–ம் பிரதிவாதி. வழக்கில் C. சேதுராமராவ் 1–ம் பிரதிவாதி அவரும்கூட வழக்கு நிலுவையின் போது இறந்து விட்டார். எனவே அவரின் மனைவியான திருமதி C.S. லலிதாம்மா அவரின் சட்டவாரிசாக கொண்டு வரப்பட்டார். அவள் இந்த மேல்முறையீட்டில் எதிர்மனுதாரர் எண். 2–A. பிரதிவாதிகள் 3 மற்றும் 4 இந்த மேல்முறையீட்டில் 3 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் இதன்பிறகு தரப்பினர்கள் விசாரணை நீதிமன்றத்தின் முன் எவ்வாறு அழைக்கப்பட்டரோ அவ்வாறே குறிப்பிடுவர்.

3. வழக்கின் கருப்பொருளான சொத்து பெங்களூரு 560 050 ஸ்ரீ நகர், முதல் பிளாக், 1 நிலை 17th மெயின் பன்சன்கரி. சைட் எண். 522–ல் அமைந்துள்ளது.

4. மேற்சொன்ன வழக்கினை பிரதிவாதிகளுக்கு எதிராக 23.04.1975–ம் தேதிய மறு பரிசீலனை ஒப்பந்த பத்திரம் பேரில் குறித்த வகை நிறைவேற்றம் கோரி அட்டவணை சொத்து குறித்து A.S.C மூர்த்தி தாக்கல் செய்துள்ளார் மற்றும் மாற்றாக 23.04.1975–ம் தேதியில் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக அவர் ஏற்படுத்தி கொடுத்த விற்பனை பத்திரம் ஆரம்ப முதலே செல்லாது என விளம்புகை செய்திட கோரியும் தாக்கல் செய்யப்பட்டது. பிராதில் சொல்லப்பட்டது போல் நகர வளர்ச்சி டிரஸ்ட் குழுமம், பெங்களூரு (சுருக்கமாக CITB) ஒரு இடத்தை வாதிக்கு ஒதுக்கியது. அதன் பிறகு அந்த இடத்தில் அவர் கட்டிடம் கட்ட தொடங்கினார் அவரிடம் போதுமான நிதி இல்லை. எனவே அவர் நிதிஉதவிக்காக பிரதிவாதியை அணுகினார். சொன்னது போல் ரூ.2,000 த்தை கடனாக பிரதிவாதிகள் கொடுத்தனர். தொடர்ச்சியாக வருடத்திற்கு 18 சதவீதம் வட்டி என்ற நிபந்தனையுடன் மேலும் ரூ.10,000/–த்தை கொடுத்தனர். இருப்பினும், வாதி மேற்படி தொகைக்கு ஒத்துக்கொண்டது போல் 2 மாதங்கள் தவிர வட்டி செலுத்திட தவறிவிட்டார். பிரதிவாதிகளுக்கு தங்குவதற்கு இடம் தேவைப்பட்டது. எனவே அவர்களை அட்டவணை சொத்தில் 11.10.1973–ம் தேதிய அடமான

பத்திரம் ஏற்படுத்தி இருக்கச் செய்தார். வாதி தரப்பின் கூற்றுப்படி ரூ.29,000/–த்தை பிரதிவாதிகள் கொடுத்துள்ளனர். வாதியால் வட்டி செலுத்த முடியவில்லை. வட்டித்தொகை செலுத்துவதை உறுதிப்படுத்திட பெயரளவிலான விற்பனை பத்திரத்தை பிரதிவாதிக்கு ஏற்படுத்தி கொடுத்திட வாதி கேட்கப்பட்டார். விற்பனை தொகைக்கான வித்தியாசம் ரூ.6,000/– பெற்றுக் கொண்டு ரூ.35,000/–த்திற்கு 23.04.1975–ம் தேதியில் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக வாதி விற்பனை பத்திரத்தை ஏற்படுத்தி கொடுத்தார். பிரதிவாதிகள் கொடுத்த பணத்திற்கு பாதுகாப்பிற்காக விற்பனை பத்திரம் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லப்பட்டது. 23.04.1975–ம் தேதியில் வாதிக்கு ஆதரவாக பிரதிவாதிகள் மறு பரிசீலனை பத்திரத்தை அட்டவணை சொத்தினை பொருத்து ஏற்படுத்தி கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டது. அட்டவணைச் சொத்தில் பிரதிவாதிகள் இருந்து வருவதற்கு வாடகை எதுவும் செலுத்த தேவையில்லை என ஒப்புக்கொண்டும் மற்றும் வாதியும் பிரதிவாதிகள் கொடுத்த தொகைக்கு வட்டி செலுத்திட தேவையில்லை என ஒப்புக்கொள்ளப்பட்டது. 5 வருடம் கழித்து வாதி பெற்ற ரூ.35,000/–த்தை பிரதிவாதிகளிடம் திருப்பி செலுத்திய பிறகு பிரதிவாதிகள் மறு பரிசீலனை பத்திரத்தை 23.04.1975–ம் தேதிய மறுபரிசீலனை ஒப்பந்த ஷரத்துப்படி ஏற்படுத்தி கொடுத்திட கேட்கப்பட்டது. இருப்பினும், பிரதிவாதிகள் விற்பனை பத்திரம் ஏற்படுத்தி கொடுத்திட தவறிவிட்டனர்.

5. வாதியால் ரூ.29,000/–ம் தொகை பெறப்பட்டதையும் மற்றும் 11.10.1973–ம் தேதிய அடமானப்பத்திரம் ஏற்படுத்தியதையும் இரண்டாம் பிரதிவாதி தனது எதிர்வழக்குரையிலும் ஒப்புக்கொண்டுள்ளார். விற்பனை பத்திரத்திற்கு முன்னதாக மறு பரிசீலனை உடன்படிக்கை ஏற்பட்டதையும் மற்றும் சொத்தினை திரும்ப பெற பிரதிவாதிகளால் ஒப்புக்கொண்டதையும் சொல்லப்பட்டுள்ளது. இருந்தபோதும் வாதி மறுபரிசீலனைக்கு ஒப்புக்கொள்ளவில்லை. வாதி மறு பரிசீலனைக்கான அவரது கோரிக்கையை விட்டு விட்டும் மற்றும் விற்பனை பத்திரத்தை ஏற்படுத்திக் கொடுத்தார். மறு பரிசீலனை உடன்படிக்கை செயல்பாட்டுக்கு வரவில்லை என்று சொல்லப்பட்டது. வாதி வங்கியிலிருந்து பல்வேறு காலங்களில் சொத்தின் பேரிலான மூல பத்திரத்தின் அடிப்படையில் கடன் பெற்றதாக மேலும் சொல்லப்பட்டது. வங்கி கடன் வாதியால் செலுத்தப்படவில்லை. பிரதிவாதிகள் மேற்படி கடன் தொகையை செலுத்தி அட்டவணைச் சொத்து ஏலத்தில் செல்லாதவாறு காப்பாற்றினர். 1963 குறித்தவகை நிவாரணச் சட்டம் (சுருக்கமாக சட்டம்) பிரிவு 16 (C)–ன் படியான தேவையாக உள்ள ஒப்பந்தத்தின் பகுதி நிறைவேற்றமான தயார் நிலை மற்றும் விருப்ப நிலை குறித்து சங்கதியோ அல்லது ஆதரவோ இல்லை என்று சொல்லப்பட்டது. 23.04.1975–ம் தேதிய விற்பனை பத்திரம் பெயரளவிலானது என்றும் மற்றும் பிரதிவாதிகளிடம் பெற்ற முன் கடனுக்காக கொடுக்கப்பட்டது என்ற அடிப்படையில் மறுக்கப்பட்டது.

6. தரப்பினர்களின் சங்கதிகளின் அடிப்படையில் விசாரணை நீதிமன்றம் தொடர்புடைய எழுவினாக்களை வனைந்தது. வழக்கு கோரிக்கைக்கு ஆதரவாக இறந்து போன வாதியின் மனைவி அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டார் மற்றும் அ.சா.1 முதல் அ.சா.19 வரையிலான ஆவணங்கள் அவளது சாட்சியத்தின் மூலம் குறியீடு செய்யப்பட்டது. இரண்டாம் பிரதிவாதி எ.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டார் மற்றும். எ.த.சா.1 முதல் எ.த.சா.15 வரை அவரது சாட்சியத்தின் மூலம் குறியீடு செய்யப்பட்டது. தரப்பினர்களின் சாட்சியம் மற்றும் ஆதரவுகளின் அடிப்படையில் விசாரணை நீதிமன்றமானது மறுபரிசீலனை உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது என்பதை வாதி நிலை நிறுத்தி உள்ளார் என்ற முடிவுக்கு வந்தது. மேலும் நீதிமன்றம் 23.04.1975–ந் தேதிய விற்பனை பத்திரம் பெயரளவிலானது இல்லை என்ற வாதியால் சொல்லப்பட்டது போல் ஒரு முடிவுக்கு வந்தது. நீதிமன்றமானது அதன் முடிவில் வாதி பிராதில் ஒப்பந்தத்தின் பகுதி நிறைவேற்றத்திற்கான தயார் நிலை மற்றும் விருப்பநிலை தொடர்பாக போதுமான சங்கதிகளை தெரிவித்துள்ளார் என பதிவு செய்தது. இருப்பினும் வாதி ஒப்பந்தத்தின் நிறைவேற்றமான தயார் நிலை மற்றும் விருப்பநிலையை அவர் நிரூபித்திட தவறிவிட்டதாக முடிவு செய்யப்பட்டது. அதன் தொடர்ச்சியாக விசாரணை நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்தது.

7. விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து வாதி R.F.A. No. 626/2001–ஐ தாக்கல் செய்தார். தரப்பினர்களின் எதிர் எதிர் வாதங்களை கருத்திற் கொண்ட உயர்நீதிமன்றம் வாதியால் ஏற்படுத்தி கொடுக்கப்பட்ட விற்பனை பத்திரம் பிரதிவாதியிடம் பெற்ற முன் கடனுக்காக பாதுகாப்பிற்காக கொடுக்கப்பட்டது என்ற முடிவுக்கு வந்தது. அதன் தொடர்ச்சியாக மேல்முறையீட்டை உயர்நீதிமன்றம் அனுமதித்தது. மேலும் மறுபரிசீலனை பத்திரத்தை அட்டவணைச் சொத்தினை பொருத்து வாதிக்கு ஏற்படுத்தி தர வேண்டும் என்று பிரதிவாதிக்கு அறிவுறுத்தியது.

8. மேல்முறையீட்டாளர்/பிரதிவாதிகள் 2–ற்காக முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.N. பட் தெரிவித்தது என்னவென்றால் திரும்ப பெற வேண்டி உடன்படிக்கைக்காக குறித்த வகை நிவாரணம் கோரி வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, அவர் பிரதிவாதிக்கு செலுத்த வேண்டிய மறுபயன் தொகை குறித்த தயார் நிலை மற்றும் விருப்பநிலையை நிரூபித்திட வேண்டும். இந்த வழக்கில் வாதி அவரின் தயார்நிலை மற்றும் விருப்ப நிலையை நிரூபித்திட தவறி விட்டார். மறுபயனுக்கான தொகையை திரும்ப செலுத்திட கூடிய பொருளாதார வசதி வாதியிடம் இல்லை. அவர் இதற்கு முன்னதாக ஸ்ரீ தியாகராஜா கூட்டுறவு வங்கியில் பெற்ற கடன் தொகையை திருப்பி செலுத்திடவில்லை மற்றும் பிரதிவாதி தான் சொத்தை காப்பாற்றிட

அந்த கடனை திருப்பி செலுத்தினார். அவருக்கு மறு பயன் தொகை திருப்பி செலுத்திடும் வசதி இல்லை. மேலும் அவர் வாதத்தின்போது 23.04.1975–ம் தேதிய விற்பனை பத்திரம் பெயரளவிலானது அல்ல என தெரிவித்தார். விசாரணை நீதிமன்றத்தின் சரியான காரணத்தின் அடிப்படையிலான தீர்ப்பினை ஏற்றுக்கொள்வதற்கு பதிலாக வழக்கின் அந்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை உயர்நீதிமன்றம் இரத்து செய்து விட்டது.

9. மறு தரப்பில் எதிர்மனுதாரர்/வாதிக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் உயர்நீதிமன்றத்தில் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை நியாயமானது என தெரிவித்தார்.

10. கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்கள் எங்களால் கவனமுடன் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

11. வழக்கானது 23.04.1975 ம் தேதிய மறுபரிசீலனை உடன்படிக்கைகான குறித்தவகை நிறைவேற்றம் கோரி வாதியால் தாக்கல் செய்யப்பட்டது. மாற்று பரிகாரமாக 23.04.1975 ம் தேதிய விற்பனை பத்திரம் ஆரம்பம் முதலே செல்லாதது என விளம்புகை செய்திடவும் வாதியை கட்டுப்படுத்தாது என்றும் கோரிக்கை செய்யப்பட்டுள்ளது. சான்றுகளை ஏற்றுக்கொண்ட விசாரணை

நீதிமன்றம் மறுபரிசீலனைக்கான உடன்படிக்கை ஏற்படுத்தியதையும் மற்றும் இருப்பதையும் நிரூபித்துள்ளார் என முடிவு செய்தது. விற்பனை பத்திரம் பெயரளவிலான ஒன்று என்ற வாதியின் கோரிக்கை எதிராக்கப்பட்டது. இருந்தபோதும் உயர்நீதிமன்றமானது பிரதிவாதிகளிடம் பெற்ற முன்கடனுக்கான பாதுகாப்புக்காக வாதியால் விற்பனை பத்திரம் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக ஏற்படுத்தப்பட்டதாகவும் மற்றும் இது விற்பனை என கருத முடியாது என்றும் முடிவு செய்தது. மேலும், மறுபரிசீலனை உடன்படிக்கையை குறித்த வகையில் நிறைவேற்றம் செய்திட உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியது. இதனால் முதல் கேள்விக்கான பரிசீலனையானது 23.04.1975 ம் தேதிய வாதியால் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக ஏற்படுத்திய விற்பனை பத்திரம் பிரதிவாதிகளிடம் பெற்ற முன் கடனுக்கு பாதுகாப்பிற்காக பெறப்பட்ட பெயரளவிலான விற்பனை பத்திரமாகும்.

12. விற்பனை பத்திரம் மற்றும் மறுபரிசீலனை பத்திரம் ஏற்படுத்தியதில் பிரச்சனை இல்லை. வாதியின் கூற்றுப்படி விற்பனை பத்திரம் ஏற்படுத்தியதற்கு பிறகு 2 மாதங்களுக்கான வட்டி செலுத்தியது தவிர வேறு தொகை கொடுக்கப்படவில்லை மற்றும் பிரதிவாதியிடம் பெற்ற முன்கடன் தொகைக்கான வட்டியை வாதி செலுத்த வேண்டியதில்லை என்றும் பிரதிவாதிகளும் வாடகை கொடுக்க வேண்டியதில்லை என்றும் இருதரப்பினர்களுக்குள் முடிவு

செய்யப்பட்டுள்ளதாக வாதி தரப்பு கூற்றாகும். தொகை சரியாக செலுத்துவதை உறுதிபடுத்திட விற்பனை பத்திரம் ஏற்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் அ.சா.8 ஆவணமாக குறியீடு செய்யப்பட்ட விற்பனை பத்திரத்தை படித்ததிலும் மற்றும் சுற்றியுள்ள மற்ற சூழ்நிலைகளும், இது ஒரு நேரடியான விற்பனை என்பதை தெளிவாக உணர்த்துகிறது.

13. சுற்றியுள்ள வெளிச்ச சூழ்நிலையில் காண்கையில் பரிவர்த்தனைக்கான உண்மையான தன்மை ஆவணத்தின் வகையத்திலிருந்து உறுதிபடுத்தப்பட வேண்டும். ஒரே நாளில் இரண்டு ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே, 1882 சட்டத்தினுடைய பிரிவு 58(c)–ல் கண்ட வெளிப்படையான வகையத்தின்படி நிபந்தனைக்கான விற்பனை என்ற வழியில் பரிவர்த்தனை அடமானமாக முடியாது. அரசு தரப்பு சான்றாவணம் 8 ல் கண்டபடி விற்பனை பத்திரத்தில் கண்ட சங்கதிகளை பரிசீலனை செய்கையில் சொத்தானது ரூ.35,000/–த்திற்கு முழுமையாக விற்பதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அடமான பத்திரத்தின் கீழ் உடைமை ஏற்கனவே ஒப்படைக்கப்பட்டது என வாதி தெரிவித்துள்ளார். இந்த ஆவணத்தின் கீழ் உடைமை ஒப்படைப்பு என்பது எழாது, இதனால் அவருக்கோ அவரது வாரிசுகளுக்கோ எந்த உரிமை நலன் சொத்தினை பொருத்து ஏற்படாது மற்றும் வாதிக்கு நீர், காற்று

வசதியுரிமையும், சொத்து பொருத்து உரிமை மூலமும், உரிமையும் மற்றும் நலனும் மற்றும் மாற்றம் செய்வதற்கான உரிமையும் உள்ளது என தெரிவிக்கப்பட்டது. பிரதிவாதி அவரது மகன் மற்றும் பேரன் சந்ததியினர் சொத்தினை வாதி அல்லது அவரின் கீழ் எந்த நபர்களின் தடையின்றியும் தொந்தரவு இன்றியும் அனுபவித்திட உரிமை உள்ளது. CITB ஆல் வழங்கப்பட்ட உடைமை சான்றிதழ் மற்றும் பெங்களூரு நகர மாநகராட்சியிலிருந்து கட்டாவிற்கு மாற்றக்கூடிய கட்டா சான்றிதழும் அவர் கொண்டுள்ளார். ஆவணத்தில் பயன்படுத்தப்பட்ட மொழியானது குழப்பம் இல்லாமலும் மற்றும் தெளிவாகவும் மற்றும் அதன் வாசகங்களில் இருந்து தரப்பினர்களின் நோக்கம் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. தரப்பினர்களால் கொடுக்கப்பட்ட சாட்சியமும் கூட முரணாக குறித்துரைக்கப்படவில்லை. ஒரு விற்பனைக்கான பரிமாற்றத்தை உருவாக்கிடவே தரப்பினர்கள் நோக்கமாக இருந்துள்ளது. எனவே மறுபரிசீலனை பத்திரம் ஏற்படுத்தியது. ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளது பெயரளவிற்கான விற்பனை பத்திரம் என்பதை ஏற்க முடியாது.

14. அடுத்த கேள்வி மறுபயனுக்காக பிரிவு 16 (c)யின் படியானதை வாதியால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா, மேற்படி கேள்வி விசாரணை நீதிமன்றம் முன் எழுப்பப்பட்டது. ஒப்பந்த நிறைவேற்றமான தயார்நிலை மற்றும் விருப்பநிலை குறித்து வாதிகளிடம் சங்கதி இல்லை. சட்டப்பிரிவு

16(c)–னை பூர்த்தி செய்யும் வகையில் சங்கதி இருந்ததாக விசாரணை நீதிமன்றம் முடிவு செய்தது. இதனால் ஒப்பந்தத்தின் பகுதி நிறைவேற்றத்திற்கான தயார் நிலை மற்றும் விருப்பநிலை பரிசீலனைக்கான கேள்வியாகும்.

15. தயார் மற்றும் விருப்பம் என்ற வார்த்தை அவர்களுடைய தர்க்கரீதியான முடிவு ஒப்பந்தத்தின் அவர்களுடைய பகுதியை செயல்படுத்த வாதி தயாராக இருந்துள்ளார். அது அவரது நிறைவேற்றத்தை சார்ந்தது. நிறைவேற்றத்திற்கான பயனை கொடுத்திட தொடர்ச்சியான தயார் நிலையும் மற்றும் விருப்பமும் வாதிக்கான முன் நிபந்தனையாகும். வாதி அதை நிரூபிக்கவோ அல்லது நிரூபிக்க தவறுவதோ அவர் தோல்வி அடையவேண்டும். ஒப்பந்தத்தின் பகுதியான வாதியின் தயார் மற்றும் விருப்ப நிலையை தீர்மானித்திட வழக்கு தாக்கல் செய்வதற்கு முந்தைய மற்றும் பிந்தைய வாதியின் நடத்தையை அதனுடன் மற்ற சூழ்நிலையையும் பரிசீலனைக்கு நீதிமன்றம் எடுத்திட வேண்டும். பிரதிவாதிக்கு வாதி செலுத்த வேண்டிய தொகையானது அதன் தேவையானதை நிரூபிக்கப்பட வேண்டும். அது கிடைக்க கூடியதாக இருக்க வேண்டும். ஒப்பந்தம் ஏற்படுத்தி கொடுக்கப்பட்ட நாள் முதல் தீர்ப்பாணை பிறபிக்கப்படும் தேதி வரை ஒப்பந்தத்தின் பகுதி நிறைவேற்றத்தை நிறைவேற்றிட அவர் தயாராகவும் மற்றும் விருப்பமாகவும் இருந்தார் என்பதை அவர் நிரூபிக்க வேண்டும்.

நீதிமன்றமானது வாதி தயாராகவும் மற்றும் எப்போதும் ஒப்பந்தத்தின் பகுதி நிறைவேற்றத்தை நிறைவேற்றிட தயாராகவும் இருந்தார் என்ற சங்கதி மற்றும் சூழ்நிலைகளில் தலையிடலாம்.

16. சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள் மூலம் N.P. திருஞானம் (இறந்தவர்) –எதிர்– Dr. R. ஜெகன்மோகன்ராவ் மற்றும் பலர்[1] (1995 (5) எஸ்சிசி 115), குறித்த வகை நிறைவேற்றம் வழங்கிட முன் நிபந்தனையானது வாதியின் தொடர்ச்சியான தயார் நிலையும் மற்றும் விருப்பநிலையும் இருக்க வேண்டும். இந்த சூழ்நிலை அவசியமானதும் மற்றும் தொடர்புடையதும் மற்றும் பரிகாரம் வழங்கிடவோ அல்லது மறுத்திடவோ பரிசீலனை செய்திட தேவையானது ஆகும். வாதி அதை நிரூபிக்கவோ அல்லது நிரூபிக்க தவறுவதோ அவர் தோல்வி அடையவேண்டும். ஒப்பந்தத்தின் பகுதியான வாதியின் தயார் மற்றும் விருப்ப நிலை தீர்மானித்திட வழக்கு தாக்கல் செய்வதற்கு முந்தைய மற்றும் பிந்தைய வாதியின் நடத்தையை அதனுடன் மற்ற சூழ்நிலையையும் பரிசீலனைக்கும் எடுத்திட வேண்டும் பிரதிவாதிக்கு வாதி செலுத்த வேண்டிய தொகையானது, அதன் தேவையானது நிரூபிக்கப்படவேண்டும். அது கிடைக்க கூடியதாக இருக்க வேண்டும்.

17. புஷ்பராணி. S. சுந்தரம் மற்றும் பலர் –எதிர்– பௌலின் மனோன்மணி ஜேம்ஸ் (இறந்தவர்) மற்றும் பலர்[2] (2002 (9) எஸ்சிசி

582), வாதியின் நடத்தையிலிருந்து தயார்நிலை மற்றும் விருப்ப நிலையை அறிய முடியும் என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் குறிப்பிட்ட வழக்கின் மொத்த சூழ்நிலையிலிருந்தும் அறியலாம் இவ்வாறு முடிவு கண்டுள்ளது:

> "அவர்கள் ஒப்பந்தத்தின் பகுதி நிறைவேற்றத்திற்கு தயாராகவும் மற்றும் விருப்பமாகவும் இருந்தார்கள் என்பது சங்கதியில் இருக்க வேண்டும் முடிவுக்கு வர எங்களுக்கு தயக்கம் இல்லை. குறித்தவகை நிவாரண சட்டம் பிரிவு 16(c) ன்படியான ரத்தான மேல்முறையீட்டாளர் தயாராகவும் மற்றும் விருப்பமாகவும் இருந்தார் என்பதற்கு போதுமானதாக இல்லை என முடிவுக்கு வரலாம். மேற்படி தேவையானதை சங்கதி மட்டும் அல்ல. அதற்கான நிரூபணமும் ஆகும். இப்போது முதல் இரண்டு சூழ்நிலைகளை விசாரிக்கலாம். வழக்கு தாக்கல் செய்வது மட்டுமல்ல. வாதியினுடைய தயார்நிலை மற்றும் சூழ்நிலை குறித்து விதிவிலக்கு கொடுக்கப்பட்டுள்ளது. வாதி கொண்டுள்ள சொத்திற்கு இது விருப்பமாக உள்ளது. அந்த விருப்பத்தால் இந்த வழக்கு தாக்கல் செய்யலாம். அந்த எழுப்பப்பட்ட சங்கதிக்கு ஆனால் வெறும் சங்கதி மட்டும் சட்டப்பிரிவு 16(c)–க்கு போதுமானது அல்ல. இது நிரூபிக்க வேண்டும்."

18. அதே பார்வை இந்த வழக்கிலும் எடுக்கப்பட்டது. மஞ்சுநாத் அனந்தப்பா URF சிவப்பா ஹன்சி –எதிர்– தமன்சா மற்றும் பலர்[3] (2003 (10) எஸ்சிசி 390) மற்றும் புக்ராஜ் D.ஜெயின் மற்றும் பலர் –எதிர்– G.கோபாலகிருஷ்ணா[4] (2004 (7) எஸ்சிசி 251).

19. உமாபாய் மற்றும் ஒருவர் –எதிர்– சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள் மூலம் நீல்காந்த் தோன்டிபா சவான் (இறந்தவர்) மற்றும் ஒருவர்[5] [(2005) 6 எஸ்.சி.சி 243] என்ற இந்நீதிமன்ற தீர்ப்பில் இது கூட கையில் உள்ள ஒரே மாதிரியான வழக்காகும் சொத்தின் மறுபரிசீலனைக்காக குறித்தவகை நிறைவேற்றத்திற்காக வாதியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். வாதியின் வழக்கானது மாற்றமானது அடமானத்திற்கும் மற்றும் மீட்டளிப்பு விற்பனைக்கும் மற்றும் கடனிலிருந்து வாதியை விடுவித்தும் மற்றும் அவர் பிரதிவாதி சொத்திற்கான பணத்தை செலுத்த தயாராக உள்ளார் என்பது மட்டும் மாற்றுக்காக உள்ளது. அடமானத்திற்கான சங்கதி இந்த நீதிமன்றத்தால் ஏற்கபடவில்லை. தயார்நிலை என்பது முன்நிபந்தனை என்பதை காணமுடிகிறது. வாதிக்கு போதிய வருவாய் இல்லை மற்றும் சொத்தினை திரும்பபெற பணத்தை ஏற்படுத்த இயலவில்லை. மொத்த சூழ்நிலையிலிருந்து முடிவுக்கு வருவதாவது ஒப்பந்தத்தின் நிறைவேற்றத்திற்கு வாதி தயாராக மற்றும் விருப்பமாக இல்லை. ஒப்பந்தத்தின் குறித்த வகை

நிறைவேற்றத்திற்கான நிபந்தனை பத்தி 30ல் சொல்லப்பட்டுள்ளது. அது கீழ்க்கண்டவாறு.

> "30 குறித்தவகை நிறைவேற்றத்தின் சட்டம் 16 (c)ன் படியான தேவையான ஒப்பந்தத்தின் பகுதி நிறைவேற்றத்திற்கான தயார்நிலை மற்றும் விருப்பநிலையில் வாதி எதிர்மனுதாரர்கள் இருந்தார்களா என்பது குறித்து முடிவுக்கு வர தரப்பினர்களின் நடத்தை மூலம் அறியலாம். வெறும் பிராது சங்கதியோ அல்லது முதல் விசாரணை வாக்குமூலமோ போதுமான ஒன்றல்ல. வாதிட எதிர்மனுதாரர்களின் நடத்தையானது மொத்த சங்கதியிலிருந்தும் கொடுக்கப்பட்ட சாட்சிய பதிவுகள் மூலம் தீர்மானிக்க முடியும்"

20. இந்த வழக்கில் ரூ.35,000/–த்தை வாதி, பிரதிவாதிக்கு செலுத்த தயாராக இருந்தார் என சொல்லப்படுகிறது. மேலும் மறுபரிசீலனை பத்திரம் ஏற்படுத்திட அழைக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. இருப்பினும் பிராது பத்தி 11ல் சொல்லப்பட்டதாவது வாதி ஒப்பந்த வியாபாரம் நடத்தியதாகவும் அதில் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது என்றும் அதனால் அந்த வியாபாரத்தை விட்டுவிட்டதாகவும் சொல்லப்பட்டுள்ளது. மேலும் அதில் சொல்லப்படுவதாவது தற்போது வாதிக்கு எந்த வியாபாரமும் அல்லது தொழிலும் இல்லை. மற்றும் எந்த

வருவாயும் இல்லை. அவர் அசையும் அல்லது அசையா சொத்து கொண்டிருக்கவில்லை. அவர் தயாராகவும் மற்றும் விருப்பமாகவும் இருந்ததாக வெறும் சங்கதி மட்டும் அதற்கு ஆதரவு இல்லாமல் சொல்லப்பட்டுள்ளது. இது ஏற்றுக்கொள்ள முடியாது. வாதியால் பணம் கொடுத்திட தயார் என்பது தேவையற்றது. ஆனால் மறுபயன் தொகையை செலுத்திட போதிய வசதி உள்ளது என்பது அவர்களது பங்கை நிரூபித்திட முக்கியமான ஒன்றாகும். அ.சா.1–ன் வாக்குமூலம் தவிர சாட்சியம் எதுவும் இல்லை. வாதிக்கு மறுபரிசீலனை உடன்படிக்கைக்கான மறுபயன் தொகை செலுத்திட வசதி ஏற்பட்டதாக காட்டிட.

21. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு கர்நாடகா கடன் நிவாரண சட்டத்தின் கீழ் உரிய அதிகாரியிடம் கடனை விலக்கி சொத்தினை திரும்ப தன்னிடம் ஒப்படைத்திட விண்ணப்பம் தாக்கல் செய்திட்டது இங்கு தொடர்புடையதாகும். அந்த விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டது என்பதில் சந்தேகம் இல்லை. அதில் உள்ள சங்கதியானது மறுபரிசீலனை உடன்படிக்கைக்கான தொகையை செலுத்திட வாதிக்கு நோக்கம் இல்லை.

22. மறுபரிசீலனை பத்திரத்தில் ரூ.35,000/–த்திற்கு வட்டி செலுத்துவது குறித்த வகுப்பு உள்ளது. இருப்பினும் வாதி தனது

வாதத்தில் வட்டி செலுத்திட ஒப்பந்தம் இல்லை என தெரிவித்துள்ளார். இது உடன்படிக்கைக்கான நிறைவேற்றி தேவையை நிறைவேற்றிட வாதி தயாராக இல்லை என்பதை காட்டுகிறது. மேலும், வாதி சொத்தினை வங்கியில் அடமானம் வைத்துள்ளார். வங்கியானது வாதிக்கு எதிராக உத்தரவு பெற்றுள்ளது. தற்போது வழக்கு சொத்து ஏலத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவின்படி வாதி வங்கிக்கு செலுத்த வேண்டிய முழுத்தொகையை பிரதிவாதிகள் செலுத்தியுள்ளனர். இந்த விபரம் கூட வாதியின் நடத்தையை காட்டுகிறது.

23. அனைத்து விஷயங்களை எடுத்துப்பார்க்கையில் ஒப்பந்தத்தின் பகுதி நிறைவேற்றத்திற்கு வாதி தயாராகவும் விருப்பமாகவும் இல்லை என விசாரணை நீதிமன்றம் சரியாக முடிவு செய்துள்ளது. விசாரணை நீதிமன்றத்தின் சரியான காரணங்களுடனான தீர்ப்பை திரும்ப பெற உயர்நீதிமன்றம் சரியான தீர்மானிப்பை செய்திடவில்லை.

24. முடிவாக இந்த மேல்முறையீடு வெற்றியடைகிறது மற்றும் அதன் காரணமாக அனுமதிக்கப்படுகிறது. 21.08.2006 ம் தேதிய உயர்நீதிமன்றம் RFA No.626/2001–ல் பிறபித்த தீர்ப்பு இரத்து செய்தும்

மற்றும் 12.04.2001–ல் விசாரணை நீதிமன்றம் O.S.No.3308/1988–ல் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை திரும்ப பெறப்படுகிறது.

25. செலவுக்கான உத்தரவு இல்லை மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது.

பொறுப்புத் துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."